2013 ஏப்ரல் 25]

புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனை நாடறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அந்த அடிப்படையிலேதான் உடனடியாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரக்கோணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கான போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கினால், உடனடியாக அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 313, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

313—

பால் கொள்முதல் நிலையம்

***3238—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, கும்மிடிப்பூண்டி

தொகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 314, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

314—

தூண்டில் வளைவு

***14033—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி, பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் கடல் பொறியியல் துறை, இராமநாதபுரம் மாவட்டம் கடற்கரைப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, தனது ஆய்வறிக்கையில், இராமநாதபுரம் மாவட்டம், கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவரோ, தூண்டில் வளைவோ அமைக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே, இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. அதற்கு சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.